2. தகவல் கோரல்

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனை செவிலியர் விடுதி மாணவியர் மருத்துவமனையில் அனுமதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உங்கள் எல்லோருக்கும் வாய்ப்பு தருகிறேன். சுருக்கமாக உங்கள் கருத்துகளைச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.* One by one please. *எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்து நின்றால் எப்படி?*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை இராஜாஜி மருத்துவமனையில் செயல்பட்டுவரும் செவிலியர் விடுதியில் 10 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரையிலும் 110 செவிலிய மாணவிகள் உணவு சாப்பிட்ட பின்பு மயக்கமடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டு, 70 மாணவிகள் சிகிச்சை முடிந்து விடுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 13 ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவரும் நானும் செவிலியர் விடுதி சென்று பார்த்தபோது ....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நீளமாக எழுதிவைத்துக்கொண்டு படிக்கக் கூடாது. 'இந்த மருத்துவமனையில், இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது; எனவே, அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்,' என்று மட்டும் சொல்லுங்கள். நீங்கள் அனைத்தையும் படித்துக் கொண்டிருந்தால், நான் மாலை 5 மணி வரை அவையை நடத்த வேண்டி வரும்.*

திரு. இரா. அண்ணாதுரை: *300 பேர் தங்க வேண்டிய செவிலியர் விடுதியில் 700 பேர் தங்கியிருக்கிறார்கள். அங்கு அடிப்படை வசதிகள் இல்லை. எனவே, அதுகுறித்து, நம்முடைய சபையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மாணவியர் செவிலியர் விடுதியில் 10-5-2012 அன்று செவிலியர்*

பயிற்சி மாணவிகள் மதியம் உணவு உண்டபின், இரவில் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டதன் காரணமாக இரவு 10-00 மணியளவில் 52 செவிலியர் மாணவிகளும், 11-5-2012 அன்று 41 மாணவிகளும், 12-5-2012 அன்று 28 மாணவிகளும் மொத்தம் 121 பேர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி, உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: அவர்கள் அனைவருக்கும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு முழுமையாக குணம் அடைந்து 15-5-2012 அன்று மாலை, அனுமதிக்கப்பட்ட அனைத்து செவிலியர் பயிற்சி மாணவிகளும் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டனர். மாணவிகளின் உடல்நலம் பாதிக்கப்பட்டவுடன், உணவில் கலப்படம் உள்ளதா, மற்றும் தண்ணீரின் நிலை Water contamination குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. கல்லூரி விடுதிகள் மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் போன்ற இடங்களில் சுகாதாரத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாணவிகள் பயிலும் கல்லூரி மற்றும் விடுதிகள் அல்லாது, மொத்த மருத்துவமனை வளாகமும் சுத்தம்—sterilize செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதியில் அரசு மணல் குவாரிகளின் விதிகளை மீறி மணல் அள்ளுவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

***திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட கீழையூர் மற்றும் அன்டராயநல்லூர் பகுதிகளிலே மணல் குவாரி இயங்கி வருகிறது. இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால், அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சின்னசேலம்-ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர்-வேட்டவலம் குடிநீர்த் திட்டம் ஆகியவை என்னுடைய